நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை
தோற்றம் - 14.09.1901

செந்தமிழ்

பகுதி: 1
தொகுதி: 114
திருவள்ளுவர் ஆண்டு 2051

திங்கள் இதழ்
விலை: ரூ.20
சனவரி - 2020

வள்ளல் பாண்டித்துரைத் தேவர்
1867-1911

மன்னர் பாசுகர சேதுபதி
1868-1903

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி**	தலைவர்
மருத்துவர் **ந.சேதுராமன்**	துணைத் தலைவர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	செயலாளர்
இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	உறுப்பினர்
முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**	உறுப்பினர்
பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
பேராசிரியர் **இரா.சதாசிவம்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்**	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	உறுப்பினர்
திரு. **துரை கருணாநிதி**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	தலைவர்
இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	செயலாளர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	உறுப்பினர்
பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **து.மாயராசன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **சு.சிவசாமி**	உறுப்பினர்
பொறிஞர் **லெ.சிவக்குமார்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி**	உறுப்பினர்
திரு. **ஜெ.பாலதண்டாயுதம்**	உறுப்பினர்
முனைவர். **ம.லெல்லிஸ்திவாகர்** பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். **கி.வேணுகா** முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். **கோ.சுப்புலெட்சுமி** துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். **பா.நேருஜி** உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1. **இதழ் மணம்** - பேராசிரியர் இரா. சதாசிவம் 4

2. **சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா** 7
- முதுமுனைவர் இரா. இளங்குமரனார்

3. **சுவடிப் பதிப்பும், இலக்கணமும்** 9
- பேராசிரியர். பெ. சுயம்பு

4. **பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரத்தில் திருக்குறளின் செல்வாக்கு** - பேராசிரியர் ப. மருதநாயகம் 22

5. **பக்தி இயக்கத்தின் மூலவேர்கள்**
- பேராசிரியர் ப. மருதநாயகம் 28

6. **சங்கச் செய்திகள்** 41

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க்கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ.200	ரூ.1.000
ஆயுள்கட்டணம்	ரூ.3,000	ரூ.10,000
புரவலர் கட்டணம்	ரூ.10,000	ரூ.20,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ.20	

இதழ் மணம்

பேராசிரியர் இரா.சதாசிவம்

குறுந்தொகையில் கவைமகனார் பாடிய பாடல் 324-ஆம் பாடலாக இடம் பெறுகிறது. இப்பாடல் பாடிய புலவர் ஒரு அரிய சொல்லாட்சியைப் பயன்படுத்துகிறார். நிலத்தைப் பண்படுத்துபவர்கள் முள்புதர்களைக் கவட்டைக் கம்பில் அடித்துக் கோத்துத் தூக்குவர். இக் 'கவை' என்னும் சொல் உலக வழக்கில் உள்ளது. இலக்கிய வழக்கில் பயன்படுத்தி இருபாற்பட்ட அன்பின் நெகிழ்வை தலைவன் - தலைவி இருவரும் உணர்ந்து திருமணம் முடிந்ததும் வாழ்வை விரைந்து தொடங்கவேண்டும். வரைவு நீட்டித்தல் தகாது; மக்கள் புழங்கும் வழக்காறு அற்ற பகுதியில் தலைவன் இரவு வந்துபோதல் தலைவியின் நெஞ்சைக் கலங்கச் செய்வதையும் அவள் அன்பு நெஞ்சம் வருந்தாது விரைந்து திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதையும்,

'கவை மக நஞ்சுண்டாங்கு

அஞ்சுவல் பெரும என் நெஞ்சத்தானே'

எனப் புலவர் வெளிப்படுத்துகிறார். 'கவைமக' என்ற அரிய சொல்லாட்சி கற்பவர் உள்ளம் கொள்ளத்தக்கது என்பதால் இப்பாடல் கவைமகனார் பாடியது எனக் குறுந்தொகையில் இடம்பெறுகிறது. பேராசிரியர் இளங்குமரனார் கவை என்னும் வழக்கை நினைவுறுத்தி அதனை இலக்கிய வழக்கில் எடுத்தாண்ட பெருமகனை கவைமகனார் எனப்போற்றப்படுவதையும் கவிதை இன்பத்தையும் துய்க்கச்செய்தது மனம் கொள்ளத்தக்கது.

சுவடிப் பதிப்பும் இலக்கணமும் : பேராசிரியர் பெ.சுயம்பு

பேராசிரியர் பெ.சுயம்பு மதுரை நான்காம் தமிழ்ச்சங்க மாணவர்களுள் குறிப்பிடத்தக்கவர். இவர், தஞ்சைத் தமிழ்ப்

பல்கலைக்கழகம், திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரி, சென்னை உ.வே.சா.நூல்நிலையம் ஆகிய இடங்களில் பணியாற்றி, தற்பொழுது ஓய்வு பெற்று திசையன் விளையில் தமிழ் எழுத்துப்பணியைத் தொடர்ந்து செய்துவரும் பெரியார். அப்பெருமகனார் தம் கட்டுரையில் படைத்துள்ள செய்திகள் தமிழ் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஒரு வரலாற்று ஆவணம் போன்றது. பனை ஓலையின் கதையும் அதனைப் பன்நெடுங்காலமாகப் பயன்படுத்தி வந்த கல்வியாளர் வரலாறும் அதன்கண் தெளிவுறுத்தப்பட்டுள்ளது. வீரமாமுனிவர் தமிழ் எழுத்துவடிவத்திற்கு அளித்த பங்களிப்பும் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதய்யரின் நடுவுநிலைமையும் அவர்கள் தமிழை வழிபட்ட செய்திகளிலும் ஆசிரியர் காட்டும் ஈடுபாடு குறிப்பிடத்தக்கது. உள்ளதை உள்ளபடி படைத்தல் என்பது மெய்யுணர்வாளர் கடப்பாடு. அதனை தம்முன்னோர் ஆர்வத்துடன் பேணிப்பாதுகாத்தது வரலாறு. வரலாறு என்பது உண்மையாக இருக்கவேண்டும். உள்ளுதல் உள்ளம்; உண்மையை நோக்கிய பயணம் உள்ளுதலின் உள்ளமாயிற்று.

பக்தி இயக்கத்தின் மூலவேர்கள், பேராசிரியர் ப.மருதநாயகம்

பண்டைத் தமிழ் இலக்கிய மரபு மடைமாற்றம் பெற்று பக்தி இலக்கிய மரபு செழித்து ஓங்குவதை நம்மாழ்வார், ஆண்டாள், திருநாவுக்கரசர் போன்ற பெரியவர்களுடைய பாடல்களில் அன்பின் வெளிப்பாடாக கவிதை வடிவம் பெற்றிருப்பதை நாம் கற்று இன்புற முடியும்.

அன்பின் வழியது உயிர்நிலை, அருள் கருதி அன்புடையராதல் போன்ற திருக்குறள் தொடர்களும், தயாமூலதனம் போன்ற தேவார ஆசிரியர்களின் அன்பின் வழிப்பட்ட பக்தி மூலமும் தென்னாட்டிலிருந்து உலகெங்கும் பரவியது. புரோகிதர் சடங்கு, சதுமறை ஆகமசாத்திரங்கள்

முரட்டுக் கூச்சலாக இருப்பதையும் உணர்ந்து ஆசிரியர் தம் கட்டுரையை நிறைவு செய்துள்ளார். தமிழ்ச்சமுதாயம் அன்பின் வழிப்பட்ட அருள் ஆட்சியை அன்றாட வாழ்க்கையில் போற்றிப்பாதுகாத்தது. அக இலக்கியங்கள் இயற்கையோடு இயைந்த அன்பு நெறியை வாழ்வில் நடைமுறைப்படுத்தின. அதுவே, பிற்காலத்தில் பக்தி இலக்கிய வேராக, வாழ்க்கை நெறியாக மாற்றம் பெற்றது. நாட்டவார், புரோகிதர் கூற்றை நம்பி சமயச் சடங்குகளில் மூழ்கி வாழ்க்கையின் இனிய பண்பாட்டை இழந்து இவ்வுலக வாழ்வின் இனிமையை இழந்து நெறி தவறிய பரிகாரங்களிலும் சடங்குகளிலும் சிக்கித் தவிக்கின்றனர். அதிலிருந்து தமிழ்ப் பக்தி இயக்கம் வேறுபட்டு நிற்கிறது. ஆழ்ந்த அன்பின் வெளிப்பாடாக அருள் நெறியைப் பாதுகாத்து வாழ்க்கையே அன்பின் வெளிப்பாடாக அமைத்துக் கொண்ட தமிழ்ச்சமுதாய வாழ்க்கை மிகப் பழமையானதும் சங்க மரபைச்சார்ந்தது என்பதும் கற்று இன்புறத்தக்கது. அன்றாட வாழ்வில் அன்புகெழுமிய வாழ்க்கை நடத்துதல் சமயம்: புறச்சடங்குகளும் ஆரவாரமும் சமயமாக மாற்றம் பெற்றது புரோகிதர் சமய நெறியும் வாழ்க்கையுமாம்.

தமிழ்ச் செம்மல் விருது

மதுரை காமராசர் பல்கலைக்கழகம் முதுபெரும் பேராசிரியர்கள் தி.முருகரத்தனம், சிற்பி பாலசுப்பிரமணியம், ம.திருமலை ஆகிய சான்றோர்களுக்குத் 'தமிழ்ச் செம்மல்' விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது பெரும் மகிழ்ச்சியளிக்கிறது. இப்பெருமக்கள் நெடிது வாழ்ந்து தமிழ் உலகுக்கு பல்லாற்றானும் உதவ வாழ்த்துவோம்.

பேராசிரியர் இரா.மோகன் மறைந்த பின்பு இவ்விருதினைப் பெறுகிறார். அதனை அவருடைய துணைவியார் நிர்மலா மோகன் பெற்றுக் கொண்டார். அப்பெருமகளை வாழ்த்துகிறோம்.

சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா

8. கவை மகனார்

முதுமுனைவர். இரா. இளங்குமரனார்

'அடித்த அடி ஒன்று தடிப்பு இரண்டு' என்பது பழமொழி. கவைக் கம்பால் - ஓரடியும் இரு பிரிவும் உடைய கம்பால் - அடித்தால் இரண்டு இடங்களில் அடிபடும் தானே! கவை என்பதற்கு 'இரண்டு' என்றும் பொருள் உண்டு என்பதை விளக்குவது இது. முள்படலை தூக்க, இக்கம்மைப் பயன்படுத்துதல் சிற்றூர்களில் இன்றும் காணக் கூடியதே.

தலைவி, வீட்டை விட்டு வெளியேற முடியாத கட்டுக்காவல் உண்டாயிற்று. அது, வீட்டுச் சிறை (இற்செறிப்பு) ஆகும். அந்நிலையைத் தோழி தலைவனிடம் கூற அவன், இரவு அனைவரும் கண்ணயர்ந்த பொழுதில் வந்து போவேன் என்றான். அது கேட்ட தோழி நீ முதலை உலாவும் காட்டாற்று வழியில் நள்ளிருள் பொழுதில் விருப்போடு வருகின்றாய். தலைவியோ தன் அறியாமையால் வருந்தி வருகின்றாள். உங்கள் இருவர் நிலையும் தான் பெற்ற இரட்டைக் குழந்தைகளும் ஒரே பொழுதில் நஞ்சுண்டது கண்ட தாய், அலமருதல் போல, யான் துயரப்படுகின்றேன். இந்நிலை நீளாமல் வரைந்து கொள்வதே அறமாம் என்றாள்.

இது குறுந்தொகை 324-ஆம் பாட்டாம்.

" கொடுங்கால் முதலைக் கோள்வல் ஏற்றை
வழிவழக் கறுக்கும் கானலம் பெருந்துறை
இனமீன் இருங்கழி நீந்தி நீநின்
நயனுடை மையின் வருதி இவள்தன்
மடனுடை மையின் உயங்கும் யானது
கவைமக நஞ்சுண் டாங்கு
அஞ்சுவல் பெருமஎன் நெஞ்சத் தானே.
இது செறிப்பறிவுறுக்கப்பட்டு, 'இரவாரா வரைவல்' என்றாற்குத் தோழி அது மறுத்து வரைவு கடாயது.

குறிப்பு:

தோழியின் பெருந்தகை மாண்பும், அருந்தகைக் கடமையும் உணர்த்துவதாய் அமைந்தது இப்பாடல் என்பது, ஒப்பிலா உவமையாக ஓங்கித் திகழ்வது '**கவை மக நஞ்சுண்டாங்கு**' என்பது.

அரும்பொருள்:

செறிப்பு - வீட்டைவிட்டு வெளியேறாவாறு முறை வைக்கப்பட்டது போல்வது. 'இரவாரா வரைவல்' - இரவுக் குறி, வருவேன்; பின்னே மணம் கொள்வேன். வரைவுகடாயது - மணந்து கொள்க என்று வற்புறுத்தியது.

கோள்வல் ஏற்றை – பற்றிக் கொண்டால் விடாத வலிய ஆண்முதலை. வழி வழக்கு அறுக்கும் - நீர்வழியே வருவாரைப் பற்றிச் செல்லாவாறு தடுக்கும். நீந்தி –கடந்து. உயங்கும் - உளைந்து வருந்தும். ஆங்கு - உவமை உருபு கவைமக - இரட்டை மகவு.

சுவடிப் பதிப்பும் இலக்கணமும்

பேரா. பெ.சுயம்பு,
திசையன்விளை,
நெல்லை மாவட்டம்.

சுவடிகளை அச்சு நூல்களாகப் பதிப்பித்து வெளியிடும் பணியில் இலக்கண அறிவு முதன்மையானது; தவிர்க்க இயலாததும் ஆகும். சுவடிகளைப் படித்தல், படியெடுத்து எழுதுதல், செய்யுட்களை இனங்காணுதல், பாடவேறுபாடுகளை ஆராய்ந்து தகுந்த பாடத்தினைத் தெரிவு செய்தல், உரை எழுதுதல் எனப் பதிப்புப் பணியில் உள்ள அனைத்து நிலைகளுக்கும் எழுத்து முதலான இலக்கணங்களின் ஒருங்கிணைந்த புலமை மிகவும் தேவை.

எழுத்துக்களின் வரிவடிவங்கள்

எழுத்திலக்கணப் பகுதிகளுள் எழுத்துக்களின் வரிவடிவம் சொல்லின் முதல், இறுதி, இடையில் வருகிற எழுத்துக்கள், புணர்ச்சி என்பன பற்றிய புலமை முதன்மையானது.

ஓலைச்சுவடிகளைப் படிக்கும்போது ஏற்படுகிற சிக்கல்களுள் எழுத்துக்களின் வரிவடிவங்கள் பற்றியது குறிப்பிடத்தக்கது. தமிழ் எழுத்துக்களின் வரிவடிவங்கள் காலந்தோறும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இந்நாளில் கிடைக்கப் பெற்றுள்ள ஓலைச்சுவடிகள் ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு உட்பட்ட பல காலங்களைச் சேர்ந்தவை. இக்காலங்களுள் தமிழ் எழுத்துக்களின் வடிவங்களில் பெரும்மாற்றம் ஏற்படவில்லை. எனினும் ஓலையேடுகளில் எழுத்தாணிகளால் எழுதியது, எழுதியோரின் கைத்திறன், சுவடிகளைப் படிப்போரின் ஆற்றலுக்கு ஈடாகப் படியெழுதுவோரின் விரைவு,

கவனக்குறைவு போன்ற காரணங்களால் எழுத்துக்கள் சிலவற்றில் வடிவ மாற்றத்தைக் காணமுடிகிறது. எழுத்துக்கள் சிலவற்றின் வடிவ அமைப்பு ஓரளவு ஒத்திருத்தல் இச்சிக்கலுக்கான காரணமாகும்.

எ,ஏ; ஒ,ஓ; க,ச,த; ஈ,ா(நெடிற்குறியீடு), ர,ற,ந,ரு; ள,ண; ஞ,நு; ஞ,நூ; ம,ழ எனும் எழுத்துக்களின் வடிவ ஒப்புமையும் எழுத்துக்களைப் போன்று உள்ள எண்களின் வடிவங்களும் படியெடுப்போருக்கு மயக்கம் தரவல்லவை. எழுத்தாணியால் எழுதும்போது, ஓலைக்குச் சேதம் ஏற்படாமலிருக்க அடியில் கோடு இடுதல், சுழித்தல், புள்ளி இடுதல் போன்ற குறிகள் இடுதலைத் தவிர்த்தல் உண்டு. அகர உயிர்மெய் எழுத்துக்களையும், மெய்யெழுத்துக்களையும் வேறுபடுத்துவது மேலே இடுகிற புள்ளியாகும். ஆனால் ஏட்டுக்குச் சேதம் ஏற்படலாம் என்று அஞ்சிப் புள்ளியிடுதலைத் தவிர்த்திடுவர். ஏகார ஓகார உயிர்மெய் நெடில்களுக்கான கொம்புக் குறியில் மேலே சுழித்தல் (ே) பதினெட்டாம் நூற்றாண்டில் வீரமாமுனிவரால் செய்யப்பெற்றது என்பதனை அவர் கொடுந்தமிழ் இலக்கணத்தில் எழுதியுள்ளார். எனவே, அவருக்கு முந்தைய காலத்து ஏடுகளில் குறிலும் நெடிலும் வேறுபாடின்றியே எழுதப்பெற்றன. மேலும், இகரத்தின் மேலே சுழிக்கிற வடிவம் ஈகாரத்திற்கு இருந்ததையும் வீரமாமுனிவர் குறிப்பிட்டுள்ளார். பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளில் வீரமாமுனிவர் குறிப்பிட்டுள்ளவாறு ஈகாரத்தை எழுதியிருத்தலைக் காணமுடிகிறது. மேலும், உயிர்மெய் எழுத்துக்களைக் கூட்டெழுத்தாக எழுதியதும் உண்டு. அறுவகை இலக்கணத்தில் கூட்டெழுத்துக்களை எழுதுகிற முறைபற்றி

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளும் விதிகளை இயற்றியுள்ளார்.

> "இது கொம்பு, இது சுழி என்று வேறு பிரித்து அறிய முடியாது. மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியே இராது. ரகரத்துக்கும் காலுக்கும் வேற்றுமை தெரியாது. சரபம் சாபமாகத் தோற்றும். சாபம் சரபமாகத் தோற்றும். ஓரிடத்தில் சரடு என்று வந்திருந்த வார்த்தையை நான் சாடு என்றே பலகாலம் எண்ணியிருந்தேன். தரனென்பதைத் தானென்று நினைத்தேன். .. .. இப்படியே குருதி என்பதைக் குந்தியென்றெண்ணித் தடுமாறினேன். இடையின ரகரத்துக்கும் வல்லின றகரத்துக்கும் பேதந் தெரியாமல் தடுக்கி நின்ற இடங்கள் பல" (என் சரித்திரம், பக்கங்கள் 559-560).

இவ்வாறு தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாதையர் எழுத்துக்களின் வடிவ ஒப்புமையால் தாம் எய்திய இடர்கள் குறித்து எழுதுகிறார்.

சொல்லும் சீரும்

செய்யுள் இலக்கியமாயின் முதலில் செய்யுள் வகையினை இனம் காண வேண்டும். ஒவ்வோர் வகைச் செய்யுளும் அதன் ஓசையைக் கட்டமைக்கிற சீர்களைப் பொறுத்தும் அடிகளின் எண்ணிக்கையினைப் பொறுத்தும் இனம் காணப்படுகிறது.

ஆசிரியம், வெண்பா ஆகியவற்றில் ஓரடிக்கு நான்கு சீர்கள் என்பது பொதுவிதி. ஆசிரியச் சீர்கள் சமன்தளையாகப் பேரளவில் அமைவது ஆசிரியப்பா.

ஆசிரியச் சீர்கள் முரண்தளையாகவும் வெண்பாச்சீர்கள் சமன்தளையாகவும் அமைவது வெண்பா. ஆசிரியவிருத்தப்பாக்களில் ஓரடியில் நான்கிற்கு மிகுதியான ஒத்த ஓசையுடைய சீர்கள் அமையும்.

உரைநடையில் சொற்களைப் பிரித்து இனம் காணுதல் எளிது. ஆனால் செய்யுட்களில் குறிப்பிட்ட செய்யுள் வகைக்கு ஏற்புடையதாகச் சீர்களைப் பிரித்தல் வேண்டும்.

சீர் அமைப்பு பல விதங்களில் காணப்படுகிறது. ஒரு சொல்லே சீராக அமையும். ஒன்றிக்கு மேற்பட்ட சொற்கள் இணைந்து சீராக அமையலாம். ஒரு சொல்லும் வேறொரு சொல்லின் பகுதியும் சேர்ந்து சீராதலும் உண்டு. இருவேறு சொற்களின் பகுதிகள் சேர்ந்து ஒரு சீராக அமைதலும் உண்டு. ஒரு சொல்லின் பகுதி மட்டும் சீராதலும் உண்டு.

எ.டு. "மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்" (3)

"வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்
கியாண்டும் இடும்பை இல" (4)

"ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை" (478)

"பதினா யிரங்கை முதுமொழி முதல்வ"
(பரிபாடல், 3:42)

"திருமணி திரைபா டவிந்த முந்நீர்"(பரிபாடல்,4:6)

சொற்பிரிப்பு

ஏடுகளைப் பெயர்த்துப் படியெழுதும்போது சொற்களை இனம் கண்டு பிரித்து எழுதுதல் வேண்டும். இதற்குச் சொற்களின் கட்டமைப்புப் பற்றிய அறிவு தேவை. சொல்லுக்கு முதலில் வருதற்குரிய எழுத்துக்கள், இறுதியில்

வரும் எழுத்துக்கள் குறிப்பிட்ட ஒரு மெய்யெழுத்தை அடுத்து வரத்தக்க மெய்யெழுத்துக்களைச் சுட்டிக்காட்டுகிற மெய்ம்மயக்கம் ஆகியன தமிழ்ச் சொல்லமைப்புப் பற்றியவை.

தமிழறிஞர்கள் மொழிக்கலப்பை ஏற்றல் இல்லை. எனவே, சொல்லமைப்பில் மாற்றங்கள் பெரிதும் நிகழவில்லை. தொல்காப்பியத்தில் கூறப்பெற்றுள்ள விதிகள் பெரும்பான்மையும் பிற்கால இலக்கண நூல்களில் ஏற்கப்பெற்றுள்ளன. சொல்முதல் எழுத்துக்களின் பட்டியலில் மட்டும் மாற்றங்கள் சில பிற்கால நூல்களில் காணப்படுகின்றன; வடமொழிச் சொற்கள் சிலவற்றின் கலப்புக் காரணமாகச் ச,ய எனும் இருமெய்களின் உயிர்மெய்ப் பட்டியலில் புதிய வரவுகள் சில ஏற்பட்டுள்ளன.

சொல்லிறுதியில் மாற்றம் குறிக்கத் தக்கதாக இல்லை. மெய்யிறுதிகள் உகர உயிர்மெய்களாக எழுதப்பெறுதல் பேச்சுவழக்கின் செல்வாக்கினால் மிக அரிதாகவே காணப்படுகின்றன. இம்மாற்றம் தொல்காப்பியக் காலத்திலேயே அமையலாயிற்று; தொழிற்பெயர்களின் புணர்ச்சியில் உகரம் வரும் எனும் விதி இது பற்றியதே.

மெய்ம்மயக்கத்தைப் பொறுத்தவரையில் தொல்காப்பியச் செய்திகளில் மாற்றம் அமையவில்லை.

பழந்தமிழ், இடைக்காலத்தமிழ் ஏடுகளைப் போன்று பிற்கால ஏடுகளிலும் கிரந்த ஏழுத்துக்களின் பதிவு இல்லை என்றே கூறலாம்.

தமிழ் இலக்கியப் படைப்பாளர்களிடம் குறிப்பாக, செய்யுள் இலக்கியக் கவிஞர்களிடம் பிறமொழிக் கலப்பு

மிகமிக அரிதாகவே காணப்படுகிறது. இலக்கணவிதிகள் அவர்களின் உடலோடு உயிராகக் கலந்துள்ளன.

சொற்பகுப்பில் சிக்கலைத் தீர்ப்பவற்றுள் புணர்ச்சி விதிகள் முதன்மையானவை. தமிழ்ப்புணர்ச்சி விதிகள் சில மட்டுமே பொருள் மயக்கத்திற்கு உரியனவாகக் காணப்படுகின்றன.

ம், ல், ன், ள், ண் எனும் மெய்யீற்றுப் புணர்ச்சித் தொடர்களுள் சில இருவேறு பொருளில் சொற்களாகப் பிரித்தற்கு வாய்ப்பானவை.

எ.டு. மரவேர் (மரம் + ஏர் ; மரம் + வேர்)

மரமாடு (மரம் + மாடு; மரம் + ஆடு)

மரவாடை (மரம் + ஆடை; மரம் + வாடை)

'இன்னு மின்னும்' (பரிபாடல் 13:64)

'மூலமு மறனும்' (பரிபாடல் 13:24)

'ஆமா மதுவொக்குங் காதலுங் காமம்'(பரிபாடல் 6:71)

'அன்பு மறனும்' (குறள்,45)

'பொதுநாற்ற முள்ளுட் கரந்து புதுநாற்றம்" (பரிபாடல் 7:6)

'பேணா தொருத்தி பேதுற வாயிடை' (பரிபாடல் 7:62)

'ஊருட னாடுங் கடை' (பரிபாடல் 7:76)

வேறீது (வேல் + தீது) (.. .. .. ..)

கோடீது (கோள் + தீது ; கோடு + ஈது)

கண்ணீர் வாள் (கண் + நீர் வாள்; கண் + ஈர்வாள்)

கண்ணல்லது (கண் + நல்லது; கண் + அல்லது)

பொன்னல்லது (பொன் + நல்லது; பொன் + அல்லது)

பொன்னாடு (பொன் + நாடு; பொன் + ஆடு)

நூறலை (நூல் + தலை; நூறு + அலை)

கனாவல்ல (கனா + வல்ல; கனா + அல்ல)

ஒன்றற்கு மேற்பட்ட பொருள் பயத்தற்கு வாய்ப்புள்ள தொடர்களை அண்மையுறுப்புக்களின் பொருள் இயைபிற்கும் பாடலின் மையக் கருத்திற்கும் ஏற்புடையதாகச் சொற்களைப் பிரித்துப் பொருளை அறியலாம்.

பாடவேறுபாடு

ஏடுகளைப் பதிப்போர் எதிர்கொள்ளும் மற்றொரு பெருஞ்சிக்கல் பாடவேறுபாடு ஆகும். பல ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பெற்ற ஓலைச் சுவடிகளைச் சிதையாது பேணுதற்காகவும் பலருக்குப் பயன்படுமாறும் ஒரு சுவடியில் படிகள் பலவற்றைப் பெயர்த்து எழுதுதல் உண்டு. அவ்வாறு எழுதுங்கால் செவி, கண் ஆகிய பொறிகளின் புலனுணர்வுத்திறன் காரணமாக ஒரெழுத்தை மற்றோர் எழுத்தாக எழுதுதற்கு வாய்ப்பு உண்டு. ஏடுகளின் பழைமையால் சிதைவு, பூச்சிகளின் அரிப்பு முதலிய காரணங்களால் செய்திகளில் பகுதிகள் அழிந்து இல்லாத நிலையில், படியெடுத்து எழுதுவோர் தாமே சிலவற்றைச் சேர்த்து நிறைவு செய்திருக்கலாம். சிலர் தமது கொள்கையினைப் பதிவு செய்கிற நோக்கில் மூலபாடத்தில் மாற்றம் செய்திடவும் வாய்ப்பு உண்டு.

“நீல மேனி வாலிழை பாகத்

தொருவ னிருதா ணிழற்கீழ்

மூவகை யுலகு முகிழ்த்தன முறையே"

(ஐங்குறுநூறு, கடவுள் வாழ்த்து)

இப்பாடலின் முதலடியில் முதலிரு சீர்கள் 'மாஅ மேனி', 'மாமலர்மேனி' எனவும் ஏடுகளில் இருத்தலை டாக்டர் உ.வே.சாமிநாதையர் குறித்துள்ளார். இவை தவிர 'மாமல மேனி', 'மலமேனி' எனும் பாடவேறுபாடு கொண்டு ஏடுகளும் உள்ளன. இப்பாடங்கள் சைவ சமய நெறியைச் சார்ந்தவை.

பாடவேறுபாடுகள் குறித்து உ.வே.சா. என்சரித்திரத்தில் 'என்கொள்கை' எனும் தலைப்பில் பின்வருமாறு எழுதுகிறார்.

"ஏட்டுச் சுவடிகளிற் கண்ட பாடங்களின் வேறுபாட்டைக் கண்டு கண்டு என்மனம் புண்ணாயிருந்தது. இன்னபடி இருந்தால் பொருள் சிறக்குமென்று எனக்குத் தோற்றின இடங்களிலும் பிரதியில் உள்ளதையே பதிப்பித்தேன். என்னுடைய கருத்தையோ திருத்தத்தையோ சிந்தாமணியில் ஏற்றாமல் மிகவும் ஜாக்கிரதையாகக் கவனித்துப் பதிப்பித்தேன். பதிப்பிக்கத் தொடங்கி நூல் எனக்கு ஒரு தெய்வ விக்கிரகம் போல இருந்தது. அதன் அழுக்கைத் துலக்கிக் கவசமிட்டுத் தரிசிக்க வேண்டுமென்பது என் ஆசை. கை கோணி இருக்கிறது, வேறுவிதமாக அமைக்கலாம். நகத்தை மாத்திரம் சிறிது திருத்தலாம் என்ற எண்ணம் எனக்கு உண்டாகவில்லை. அதன் ஒவ்வோரணுவிலும் தெய்விக அம்சம் இருக்கிறதென்றே நம்பினேன். அழுக்கை நீக்கி விளக்குவதற்கும் அங்கத்தையே வேறுபடுத்துவதற்கும் உள்ள வித்தியாசத்தை நன்றாக அறிந்திருந்தேன். இக்கருத்தை, புராதனமான தமிழ் நூல்களும் உரைகளும்

பண்டை வடிவம் குன்றாதிருத்தல் வேண்டுமென்பதே எனது நோக்கமாதலின் பிரதிகளில் இல்லாதவற்றைக் கூட்டியும், உள்ளவற்றை மாற்றியும், குறைத்தும் மனம் போனவாறே அஞ்சாது பதிப்பித்தேனல்லேன். ஒருவகையாகப் பொருள் கொண்டு பிரதிகளில் இருந்தவாறே பதிப்பித்தேன். யானாக ஒன்றுஞ் செய்திலேன்" (பக்கங்கள் 611,612)

உ.வே.சா. பதிப்பின் செம்மைக்கு அவரது நேரிய கொள்கையே காரணமாகும் பாடவேறுபாடுகள் பல இடம்பெற்ற நூல்களைப் பதிப்பிக்கும்போது, பழையவுரைகளில் உள்ள செய்திகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். உரைச் செய்திகள் சரியான பாடத்தைத் தேர்ந்தெடுத்திட உதவலாம்.

"கொடிப்பூ வேழந் தீண்டி யயல
வடுக்கொண் மாஅத்து வண்டளிர் நுடங்கும்
மணித்துறை யூரன் மார்பே
பனித்துயில் செய்யு மின்சா யற்றே" (ஐங்குறுநூறு,14)

இப்பாடலின் இரண்டாம் அடியில் 'வடிகொண்' எனும் பாடமும் இருத்தலை உ.வே.சா. காட்டியுள்ளார். இதன் பழையவுரை, "நீண்ட பூவினுடைய வேழம் தீண்டுதலான் வடுக்கொண்மாத்து வண்டளிர் நுடங்குமென்றது பரத்தையரால் தமக்கு உளவாகிய மெலிவு கூறியவாறு" எனக் காணப்படுகிறது. உரையிலுள்ள 'வடுக்கொள்' என்பது உ.வே.சாமிநாதையரால் ஏற்கப் பெற்றுளது.

'கொடிப்பூ" எனும் முதலடி முதற்சீரின் எதுகைக்கு ஏற்பப் படியெடுத்தோர் 'வடிகொண்' என்று பாடம் எழுதியுள்ளார்.

பழையவுரைகளிலுள்ள பதவுரை, விரிவுரைப் பகுதிகள் மூலபாடத்தைை அறிந்திடப் பெரிதும் பயன்படும்

சரியான மூலபாடத்தை உறுதி செய்திட மூலத்தைப் படைத்த புலவரின் மொழிக் கொள்கையினையும் துணைக்கு ஏற்கலாம்.

'புதல்வற் கவைஇயினன் றந்தை மென்மொழிப்
புதல்வன் றாயோ விருவருங் கவை யினள்
இனிது மன்றவவர் கிடக்கை
நனியிரும் பரப்பினிவ் வுலகுட னுறுமே'
(ஐங்குறுநூறு 401)

இப்பாடலில் 'கவைஇயினன்', 'கவையினள்' என இகரம் பெற்றும் பெறாதும் ஒரே சொல் இரு விதமாக வருகிறது. உ.வே.சாமிநாதையரும் அவருடைய புதல்வர் கலியாணசுந்தரையரும் இப்பாடலில் உள்ளவாறேப் பதிப்பித்துள்ளனர். ஆனால், ஏனைய பதிப்புக்களில் 'கவைஇயினன்', 'கவைஇயினள்' என்று இகரம் பெற்ற சொல் மட்டுமே காணப்படுகிறது.

இப்பாடல், பேயனார் பாடியது. பேயனாரின் ஐங்குறுநூற்றுப் பாடல்கள் பலவற்றில் இகரம் பெற்ற சொற்கள் காணப்படுகின்றன. இந்த இகரம் இறந்தகால இடைநிலையாகும். இதனை, இறந்தகால வினையெச்சமாகவும் சொல்லிசையளபெடையாகவும் இலக்கண ஆசிரியர்கள் கூறுவர்.

எ.டு. 'செய்யோ ளிளமுலைப் படீஇயரென் கண்ணே' (450)
'தளவின் பைங்கொடி தழீஇப் பையென' (454)
'அரசுபகை தணிய முரசுபடச் சினைஇ' (455)
'கார்செல் கானம் பின்படக் கடைஇ' (465)
'வன்புல நாடற் றரீஇய வலனேர்' (469)

இகரம் பெற்ற சொற்களைப் பயன்படுத்துதல் பேயனார் மொழிநடையின் தனி இயல்பு. ஆனால் பிற்காலத்து ஏடு

பெயர்த்து எழுதியோர் அவரது நடையைக் கருத்தில் கொள்ளவில்லை.

பொருள் கொள்ளுதல்

தமிழ்ச் செய்யுள் வகைகள் ஓசைகளின் இயல்புக்கு ஏற்ப வகை வேறுபடுத்தப்படுகின்றன. இவ்வோசைகள் தாளத்தை அமைக்கிற சீர்களின் அமைப்பிற்கேற்ப அமைகின்றன. எனவே, புலவர்கள் இசையொடு தழுவிய ஓசைகளுக்கு முதலிடம் தந்து செய்யுட்களை எழுதுகின்றனர். செய்யுட்களால் உணர்த்தப்படுகிற பொருள் பிந்தைய இடத்தையே பெறுகிறது.

ஒரு தொடரின் பொருள் அதில் அடுத்தடுத்து அமையும் அண்மையுறுப்புக்களாகிய சொற்களின் பொருள் இயைபுக்கேற்பத் தெளிவாகப் புலப்படும். பொருள் இயைபற்ற உறுப்புக்கள் அண்மை உறுப்புக்களாகுமிடத்து, தொடரின் பொருளை அறிதலில் மயக்கம் அல்லது தெளிவின்மை உண்டாகும். செய்யுளில் பொருள் பின்னுக்குத் தள்ளப்பட்டு, ஓசை முதலிடம் பெறுதலால், அண்மையுறுப்புக்கள் இடம் மாறியும் அமையலாம். ஓசை இயைபுக்கேற்ற சொற்கள் அடுத்தடுத்து அமையலாம். இதற்குத் தமிழ் யாப்பிலக்கணம் வழி வகுத்துள்ளது.

செய்யுளின் தொடர்களில் சொற்கள் இடம் மாறிக் காணப்படுமிடத்து, அவற்றைத் தமிழ்த் தொடரமைப்புக்கு ஏற்பவும் பொருள் இயைபுக்கு ஏற்பவும் மாற்றி அமைத்துப் பொருளைக் கொள்ளுதற்கும் தமிழ் இலக்கண அறிஞர்கள் விதிகளை அமைத்துள்ளனர். இத்தகு பொருளை அறிகிற நெறியினைப் பொருள்கோள் எனக் கூறுவர்.

இடம் மாற்றி, ஒன்றோடு மற்றொரு சொல்லை இணைத்துப் பொருளை அறிந்துகொள்கிற முறைக்கேற்ப,

இலக்கண நூல்கள் பொருள்கோளின் வகைகளை வரையறுத்துள்ளன. வகைகளின் எண்ணிக்கை நூல்களுக்கு இடையே வேறுபடுகிறது. நிரல்நிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று எனும் நான்கினைத் தொல்காப்பியம் விவரிக்கிறது. நன்னூல் முதலிய பிற்கால நூல்கள் யாற்றுநீர், பூட்டுவில், தாப்பிசை, அளைமறிபாப்பு, கொண்டுகூட்டல் என்பவற்றைச் சேர்த்தும் சுண்ணத்தை நீக்கியும் எட்டுவகைகளைக் கூறுகின்றன. இவற்றுள் யாற்றுநீர்ப் பொருள்கோள் தமிழ்த் தொடரமைப்புக்கு ஏற்பச் சொற்கள் (சீர்கள்) பொருள் இயைபுடன் இடம் மாறுதலின்றி அமைதலைக் குறிப்பது. எனவே, இதனை ஒரு பொருள்கோள் நெறியாகக் கொள்ளுதல் வேண்டா. ஏனை யாவும் சொற்களை இடம் மாற்றி அமைத்துப் பொருள் கொள்ளுதல் எனும் வகைக்குள் அடங்கும்.

எ.டு. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே உலகு (1)

இக்குறளில் இரு தொடர்கள் உள்ளன. இத்தொடர்களைத் தமிழ்த் தொடருக்கு ஏற்ப மாற்றி அமைக்குமிடத்து,

எழுத்தெல்லாம் அகர முதல; உலகு ஆதி பகவன் முதற்று என்று ஆகும். எழுத்தெல்லாம், உலகு எனும் இரண்டும் எழுவாய்கள். முதல, முதற்று என்பன பயனிலைகள். ஏ-அசைநிலை (ஈற்றசை).

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக (391)

இதிலும் இரு தொடர்கள் உள்ளன.

(நீ) கற்பவை கசடறக் கற்க; (நீ கற்பவை) கற்றபின் அதற்குத் தக நிற்க. நீ என்பது தோன்றா எழுவாய்.

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் (3)

இக்குறள் யாற்றுநீராக எவ்வித இடமாற்றமும் இன்றிச் சொல் இருந்தவாறே பொருளை உணர்த்துமாறு அமைக்கப் பெற்றுள்ளது.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் - எழுவாய்
நிலமிசை நீடு வாழ்வார் - பயனிலை

இங்கு 'வாழ்வார்' எனும் சொல் வகையுளியாக இரு சீர்களில் சேர்க்கப்பெற்றுளது.

பொருள் கொள்ளும்போது செய்யுள் விகாரமாகச் சொற்கள் திரிந்து காணப்படின், அவற்றின் உண்மையான வடிவத்தை முதலில் எழுதுதல் வேண்டும்.

சுவடிகளைப் பதிப்போர் மூலத்தை மட்டுமன்றிச் செய்யுட்களுக்கு உரை எழுதுதலும் உண்டு. உரை எழுதும் பணியில் சொற்களுக்கான பொருளைத் தீர்மானிப்பது முதன்மையானது. இலக்கியம் எழுதப்பெற்ற காலம், புலவர் வாழ்ந்த இடம் போன்றவற்றைக் கருத்தில் கொண்டால் சொற்களுக்கான பொருள் பெரிதும் செம்மையாகப் புலப்படும்.

அருஞ்சொற்களுக்கான பட்டியல், அவற்றின் பொருள் ஆகியவற்றை நிரல்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். உரையின் ஒரு பகுதியான பதவுரையில் இப்பட்டியல் பயன்படும். விரிவுரை அல்லது விளக்கவுரை எழுதுமிடத்து நூலோடு ஒப்புமை கொண்ட பிற நூல்களின் புலமை இன்றியமையாதது.

சுவடிப் பதிப்பின் ஒவ்வொரு பகுதியிலும் இலக்கணம் இன்றியமையாதது என்பது இவண் குறிக்கத்தக்கது.

பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரத்தில் திருக்குறளின் செல்வாக்கு

பேரா. ப.மருதநாயகம்
(ப.நி.), ஆய்வறிஞர்,

நடுவண் அரசு செவ்வியல்
தமிழ் நிறுவனம்,
தரமணி, சென்னை -600113.
கைபேசி : 9442787727

சென்ற இதழின் தொடர்ச்சி

அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல் (20:198)

எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும் (21:207)

இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன்உடையான் கண்ணே உள (23:223)

அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல் (25:243)

அருளல்லது யாதெனின் கொல்லாமை கோறல்
பொருளல்லது அவ்வூண் தினல் (26:254)

ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தால் வரும் (27:264)

வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்

ஈண்டு முயலப் படும் (27:265)

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்

சுடச்சுட நோற்கிற் பவர்க்கு (27:267)

பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம்
எற்றுஎற்றுஎன்று
ஏதம் பலவும் தரும்
(28:275)

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்

கள்ளத்தால் கள்வேம் எனல் (29:282)

தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்

தன்நெஞ்சே தன்னைச் சுடும்
(30:293)

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்

உள்ளத்துள் எல்லாம் உளன் (30:294)

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய

பிறத்தல் அதனால் வரும் (31:303)

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்

பகையும் உளவோ பிற (31:304)

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண

நன்னயம் செய்து விடல் (32:314)

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா

பிற்பகல் தாமே வரும் (32:319)

நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி (33:324)

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை (34:331)

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன் (35:341)

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு (35:350)

அவாஎன்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து (37:361)

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும் (37:362)

அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம்அ·. துண்டேல்
தவாஅது மேன்மேல் வரும் (37:368)

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து (40:398)

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும் (42:416)

சென்ற இடத்தால் செலவிடாது தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு (43:422)

செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து (44:431)

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை (44:439)

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல் (45:443)

மனநலத்தின் ஆகும் மறுமைமற்று அஃதும்
இனநலத்தின் ஏமாப்பு உடைத்து (46:459)

ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும் கண்ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை (58:579)

குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றுஇ லவர்க்கு (61:604)

துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும் (66:651)

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின் (67:666)

அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு (79:787)

ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக் கழுந்தும் அளறு (84:835)

ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை (90:891)

சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர் (97:962)

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து (98:978)

அன்புநாண் ஒப்பரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண் (99:983)

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு (100:994)

பொருளானாம் எல்லாமென்று ஈயாது இவறும்
மருளானாம் மாணாப் பிறப்பு (101:1002)

இன்மை இடும்மை இரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில் (107:1063)

மேலை ஒப்பிலக்கிய வல்லுநர்கள், ஒரு நூலின் செல்வாக்கு இன்னொரு நூலில் இருப்பதை நிறுவுதற்கு, இவற்றிற்கும் மேலான சான்றுகள் வேண்டமாட்டார்.

பதஞ்சலிமுனிவரின் யோகசூத்திரமே திருக்குறளிலிருந்து மூலக்கருத்துகளைப் பெற்றிருக்குமானால், அகில இந்திய அறிவு மரபிற்குத் தமிழின் பங்களிப்பு எவ்வளவு பேரளவினது என்பதை உணரலாம். இதனைத் தெ.பொ.மீ. ஓரளவிற்குச் சுட்டிக் காட்டியுள்ளார்.

Among the Dravidian vernaculars, all the cultural languages other than Tamil have been getting themselves merged more and more in the Sanskrit language itself. It is Tamil which has resisted the course From the very beginning of its contacts to the present day. Whilst, therefore, the other units have become one with the circulating and digestive system of the organisum Tamil unit retains its individuality and to continue the comparision, whilst the north Indian culture has developed into a respiratory and digestive organ, the South Indian culture has developed into its cerebrum, controlling all the voluntary systems of the great living organisum of Indian thought.

அகில இந்திய அறிவு மரபிற்குத் தலையாய பங்களிப்பைச் செய்தவர்கள் வடநூலார் என்ற கருத்து ஒருசில குழுவினரின் அரசியல் செல்வாக்குக் காரணமாகவும் அன்னார் பிறமொழி அறிஞர்கள் பலரைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தமையாலும், பதிப்புத்துறையிலும், ஊடகத்துறையிலும் அவர் கைகள் ஓங்கி இருந்தமையாலும் யாருடைய எதிர்ப்புமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், கடந்த முப்பது, நாற்பது ஆண்டுகளில்தான் வடமொழி நூல்களின் காலமும் அவை பிற இந்திய மொழி நூல்களிலிருந்தெல்லாம் எவ்வளவு கடன் பெற்றிருக்கின்றனவென்பதும் நடுவுநிலையுணர்வுடைய மேலை அறிஞர்களால் தெளிவாக்கப்பட்டு வருகிறது. எனவே, அகில இந்திய அறிவு மரபிற்கும் அறவுணர்விற்கும் பெரும்பங்களிப்பைச் செய்தவை சங்கச்சான்றோர் பாடல்களும், திருக்குறள், தேவாரம், திருவாசகம், நாலாயிரதிவ்வியப் பிரபந்தம் போன்ற பக்திப்பனுவல்களும், கம்பராமாயணமும் என்பதை உலகறியச் செய்யவேண்டியது நமது கடமையாகும்.

பக்தி இயக்கத்தின் மூலவேர்கள்

பேரா. ப.மருதநாயகம்,
ஆய்வறிஞர், (ஓய்வு)
நடுவண் அரசு செவ்வியல்
தமிழ்நிறுவனம், தரமணி,
சென்னை -600113.
9442787727

சங்கச் சான்றோர் செய்யுட்கள் சங்ககாலம், சங்கம் மருவிய காலம் ஆகியவற்றிற்குப் பிறகு தமது செல்வாக்கை இழந்து மறைந்துவிட்டன என்றும், பின்னால் இருபதாம் நூற்றாண்டில்தான் அவை மீண்டும் பெறப்பட்டு அச்சேற்றப்பெற்றுப் பெருமை பெற்றிருக்கின்றன என்றும் எண்ணுவது தவறாகும். சங்க காலத்து அகப்புற இலக்கியங்களின் தாக்கத்தை அவற்றிற்குப் பின்னால் வந்த பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலும் ஆழ்வார் நாயன்மார் பாடல்களிலும் பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற காப்பியங்களிலும் பக்தி இயக்கப் பாடல்களின் மூலம் பின்னால் வந்த இலக்கியங்களிலும் காணலாம். ஒப்பிலக்கியக்காரர் வரையறை செய்து பேசும் நேரடித் தாக்கம் (direct influence), மறைமுகத் தாக்கம் (indirect influence), செல்வாக்கு (reception), போலச் செய்தல் (imitation) போன்றவற்றின் மூலமாக, சங்க இலக்கிய மரபு இடையறாது இன்றுவரை தொடர்ந்து வந்திருக்கிறது என்பதே உண்மை. காளிதாசன் வழியாக, அவற்றிலிருந்து பெறப்பட்ட சில இலக்கியக் கூறுகள் வட இலக்கியங்களையும் சென்றடைந்திருக்கின்றன.

பக்தி இயக்கம் தமிழகத்தின் தென்பகுதியில் தோன்றி இந்தியத்துணைக் கண்டம் முழுவதும் பரவியது. பக்திப் பாவலர்கள் முதலில் தமிழ் கூறும் நல்லுலகில்தான் தோற்றம் பெற்றனர். பின்னால் இந்திய மொழிகள் யாவற்றிற்கும் பொதுவான பாடு பொருள்களாக வளர்ச்சி பெற்றவை பல ஆழ்வார்களின் பாடல்களில் முதன்முதலில் சிறப்புற்றன. இறைவனின் படைப்பை அவன் திருவிளையாடலாகக் கருதலும், திருமாலின் அவதாரங்கள் பத்தெனப் பேசலும் கண்ணனின் குழந்தைப் பருவத்தைப்பற்றிக்கூறி மகிழ்தலும் இறைவனையும் அடியவரையும் காதலன் காதலியராகக் கற்பனை செய்து கொள்ளலும் இத்தகைய பிறபலவும் தமிழிலேயே பிறப்பெடுத்தன.

கண்ணன் எனும் பாத்திரம் முல்லை நிலத் தெய்வமாக மாயோன், மால் என்ற பெயர்களில் பாராட்டப்பட்டது. பரிபாடலிலும் சிலம்பிலும் திருமாலின் திருவிளையாடல்களைப் பற்றிய பாடல்கள் பலவற்றைக் காண்கிறோம். ஆழ்வார்களின் பாடல்களில் கண்ணன் தெய்விகக் காதலனாக, பன்முகப் பாத்திரமாகப் படைக்கப்படுகிறான். இத்தமிழ் மரபே பத்தாம் நூற்றாண்டில் பாகவத புராணத்தையும் அதன்மூலம் இந்திய மொழிகளின் பக்தி இலக்கியங்கள் பலவற்றையும் சென்றடைகிறது. தமிழ், பக்திப் பாவலர்க்கும் இறையியல் வல்லுநருக்கும் ஒருசேர இன்பம் அளிக்கும் மொழியாக அமைந்ததற்கு அது இலக்கிய மொழியாகவும் பேச்சு மொழியாகவும் வளர்ச்சி பெற்றிருந்ததே காரணம் என்று ஏ.கே.ராமானுஜன் கூறுவார்.

Yet Tamil was dear to the poets and theologians.

Tamil alone had a full – grown literary courtly

tradition as well as oral and village folk

traditions, which "qualified" Tamil as a real alternative, in the culture of the time, for popular religious compositions.
(Hymns for the Drowning, p.128)

பக்தி இலக்கியத்தின் தென்னகத் தோற்றம் பற்றியும் அது சங்க இலக்கியத்திற்குக் கடன்பட்டிருப்பது பற்றியும் அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். எனினும் பக்திப்பாடல்களில் சங்க இலக்கியங்களின் செல்வாக்கு அவர்கள் மதிப்பீட்டையும் கடந்து செல்கிறது.

சங்க இலக்கிய வகைகள் பக்தி இயக்கத்தின்போது பக்தி இலக்கியங்களுக்கேற்ப மாற்றம் செய்யப்பெற்றன. புறப்பாடல் மரபுகளை முதலில் பரிபாடலும், பின்னால் ஆறாம் நூற்றாண்டில் முதல் மூன்றாழ்வார்களும் எட்டாம் நூற்றாண்டில் நம்மாழ்வாரும் பயன்படுத்திக் கொண்டார்கள். பதின்மூன்றாம் நூற்றாண்டில் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் தமது ஆசார்ய ஹ்ருதயம் எனும் வைணவ சமய விளக்கப் பெருநூலில் சங்க இலக்கிய அகப்புற மரபுகளைக் கொண்டு வருகிறார்.

புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றிலும் **சிறுபாணாற்றுப் படை, பெரும் பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, ஆகியவற்றிலும் காணப்படும் வகைமையைத் திருமுருகாற்றுப்படை** எடுத்துக் கொள்கிறது. ஆற்றுப்படையில் ஒரு புலவன் தனக்குப் பரிசளித்த மன்னனிடம் இன்னொரு புலவனை ஆற்றுப்படுத்துகிறான். திருமுருகாற்றுப்படையில் முருகனின் அருள்பெற்ற ஒருவன் பிறரெல்லாம் அவனை நாடிச் சென்று முத்திநிலை எனும் பெரும்பேறு பெற வழி சொல்கிறான்.

பரிபாடலில் செவ்வேள் பற்றிய எட்டுப் பாடல்களும் திருமால் பற்றிய ஏழு பாடல்களும் சங்க இலக்கிய அகப்புற மரபுகளைச் சிறுசிறு மாற்றங்களுடன் கையாளுகின்றன. மன்னனின் புகழ்பாடும் பாடாண் திணைக் கூறுகள் திருமாலைப் பாடுதற்குப் பொருத்தமாய் அமைவதைக் காண்கிறோம். பாடாண்திணைக்குரிய பதின்மூன்று துறைகள் திருமாலை மன்னர் மன்னனாகக் கண்டு மகிழப் பரிபாடல் கவிஞர்களுக்குத் துணை செய்கின்றன. செந்துறைப் பாடாண் பாட்டு, இயன்மொழி வாழ்த்து, வஞ்சித்துறைப் பாடாண் பாட்டு, நாடு வாழ்த்து, வாகைத்துறைப் பாடாண் பாட்டு, களவழி, வாகை, விறலியாற்றுப்படை, காட்சி வாழ்த்து, பரிசில் துறைப்பாடாண் பாட்டு, பாணாற்றுப்படை, முல்லை காவல் முல்லை ஆகிய துறைகளின் பாடுபொருள்களில் எல்லாம் மன்னனின் இடத்தில் திருமால் முன்னிறுத்தப் பெறுகின்றான். இயல்மொழி வாழ்த்தில் அரசனின் முன்னோர் செயல்களெல்லாம் அவனுடைய செயல்களாகவே பாராட்டப்படுமானால் திருமால் பற்றிய பரிபாடல்களில் திருமாலின் பத்து அவதாரங்களின் செயல்களெல்லாம் அவனுடைய வெற்றிகளாகவே போற்றப் பெறுகின்றன. புறநானூற்றின் பதினேழாம் பாடலில் கைலாசபதி ஒன்பது கூறுகள் இடம் பெறுவதாக அறிவிப்பார். அரசனின் நாட்டு எல்லைப்பரப்பு, தொண்டி நகரச் சிறப்பு, அரசனின் நல்லாட்சி, அவனுடைய புகழுக்குரிய முன்னோர்கள், படுகுழியில் விழுந்த பின்னும் எழுந்து தப்பித்துச் செல்லும் யானை உவமை, அரசனுடைய எதிரிகளின் எதிர் வினைகள், கோட்டைகளின் வருணனை, மன்னனுடைய யானைப்படை, அவனது கொடைப்பண்பு ஆகிய ஒன்பதில் ஆறு கருக்கள் இரண்டாம் பரிபாடலில் காணப்படுவதை ஏ.கே.ராமானுஜன் சுட்டிக்காட்டுவார். இப்பாடலில் வரும் போர் வருணனை பதிற்றுப்பத்தின் முப்பத்தைந்தாம் பாடலின் போர்

வருணனையோடு பெரிதும் ஒத்திருக்கும்; மன்னனின் நகரச் சிறப்பு புறப்பாடலில் பேசப்பெறுவதைப் போல் திருமால் குடி கொண்டுள்ள மாலிருங்குன்றத்தின் பெருமையைப் பரிபாடலின் பதினைந்தாம் பாடல் விளக்கும்.

பாடாண்திணை மரபு நாயன்மார், ஆழ்வார்களின் பாடல்களில் செல்வாக்குப் பெறுவதை சுவெலபில் (Zvelebil) தெளிவுபடுத்துவார். வள்ளலாகிய மன்னனின் பெருமையைப் புலவர் போற்றுவது, அவனிடம் பரிசில் வேண்டுவது, மன்னன் பொன்னையும் பிறவற்றையும் பரிசில்களாகத் தருவது, வரிசையறிந்து பரிசில் ஈயாத வள்ளலைப் புலவர் கடிந்து கொள்வது ஆகிய ஐந்து சூழல்களும் இறைவனை அடியாராகிய கவிஞர் புகழ்ந்துரைப்பது, தன்னையும் இறைவனையும் அறியத் துணை செய்யுமாறு இறைவனை அடியார் வேண்டுவது, இறைவன் அடியார்க்கு அவர் கேட்பனவெல்லாம் தந்து மகிழ்விப்பது, ஒரோவழி, அருள் காட்டக் காலம் நீட்டிக்கும் இறைவனை அடியார் நிந்திப்பது ஆகியவையாக மாற்றம் பெறுகின்றன. முதலாழ்வார் மூவரின் அந்தாதிப் பாடல்களில் இறைவனின் வள்ளன்மையும் வீரமும் அடியாரைக் காக்கும் காவல் சிறப்பும் அடியாரின் பகைவரை அழிக்கும் பெருவீரமும் பக்திப் பனுவலுக்கேற்றவாறு மாற்றம் பெறுகின்றன.

நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாடல் அவர் அகப் புறப்பாடல்களில் ஆழங்கால் பட்டவர் என்பதற்கு நல்ல சான்றுகளாகும். புறப்பாடலில் வரும் போர் வருணனையை அவரது பாடலொன்றில் தெளிவாகப் பார்க்கலாம்.

மாறு நிரைத்து இரைக்கும் சரங்கள் இன
நூறு பிணம் மலைபோல் புரள, கடல்
ஆறு மடுத்து உதிரப் புனலா, அப்பன்
நீறு பட இலங்கை செற்ற நேரே! (3600)

ஆற்றுப்படைக் கூறுகள் திருமாலிருஞ்சோலை மலை பற்றிய பாடல்களில் இடம்பெறும்.

திறம் உடை வலத்தால் தீவினை பெருக்காது
அறம் முயல் ஆழிப் படையவன் கோயில்
மறு இல் வண் சுனை சூழ் மாலிருஞ்சோலைப்
புறமலை சாரப்போவது கிறியே (3114)

கிறி என நினைமின்! கீழ்மை செய்யாதே
உறி அமர் வெண்ணெய் உண்டவன் கோயில்
மறியொடு பிணைசேர் மாலிருஞ்சோலை
நெறிபட அதுவே, நினைவது நலமே (3115)

நலம் என நினைமின்! நரகு அழுந்தாதே
நிலம் முனம் இடந்தான் நீடு உறைகோயில்
மலம் அறு மதிசேர் மாலிருஞ்சோலை
வலம்முறை எய்தி மருவுதல் வலமே (3116)

கண்ணன் காட்டிய பெருவீரத்தைச் சுட்டும் நிகழ்ச்சிகள் புறப்பாடல் மரபில் பேசப் பெறுவதை ஒரு பாடலில் கண்டு மகிழலாம்.

ஏறேல் ஏழும்வென்று ஏர் கொள் இலங்கையை
நீறே செய்த நெடுஞ் சுடர்ச் சோதி!
தேறேல் என்னை: உன் பொன் அடி சேர்த்து ஒல்லை
வேறே போக எஞ்ஞான்றும் விடலே (3108)

திருவாய்மொழியின் மூன்றிலொரு பங்குப் பாடல்கள் சங்க அகப்பாடற் கூறுகளைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளும். நம்மாழ்வார் தம்மைத் தலைவியாகவோ,

தலைவியின் தாயாகவோ, தோழியாகவோ மாற்றிக்கொண்டு, திருமாலைத் தலைவனாக்கி அவன் அருளை இறைஞ்சுவார். பாடாண் திணையின் புறமரபையும் கைக்கிளையின்அக மரபையும் ஆழ்வார் அருமையாகப் பயன்படுத்திக் கொள்வார்.

காமுற்ற கையறவோடு எல்லே இராப்பகல்
நீமுற்றக் கண் துயிலாய் நெஞ்சு உருகி
ஏங்குதியால்
தீமுற்றத் தென் இலங்கை ஊட்டினான் தான்
நயந்த
யாம் உற்றது உற்றாயோ? வாழி! கனை கடலே
(3011)

வேவு ஆரா வேட்கைநோய் மெல் ஆவி உள்
உலர்த்த
ஓவாது இராப்பகல் உன்பாலே வீழ்த்து ஒழிந்தாய்
மா வாய் பிளந்து மருதிடைபோய், மண் அளந்த
மூவா முதல்வா! இனி எம்மைச் சோரேலே
(3018)

திருமாலின் அருள் கிட்டாதபோது தலைவனைப் பிரிந்த தலைவி வாடுவதைப் போன்று ஆழ்வார் துயருற்றுப் பேசுவார்.

குறுந்தொகையின் அறுபத்தாறாம் பாடலில் கார்காலம் வந்த பின்னும் தலைவன் வராததால் வருந்திய தலைவியிடம், "இம்மழை பருவமல்லாத காலத்துப்பெய்வது; இதைக் கார்காலத்துக்கு உரியதென்று கருதி மயங்கிய கொன்றை மரங்கள் மலர்ந்தன. அதனால் இது கார்ப்பருவமென்று நினைந்து நீ வருந்தாதே" என்று தோழி கூறுவாள்.

மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை
கல் பிறங்கு அத்தஞ் சென்றோர் கூறிய
பருவம் வாரா அளவை நெரிதரக்
கொம்புசேர் கொடியிணர் ஊழ்த்த
வம்ப மாரியைக் காரென மதித்தே
(குறுந்தொகை 66)

இப்பாடலை நம்மாழ்வார்,

மலர்ந்தே ஒழிந்தில - மாலையும் மாலைப் பொன்
வாசிகையும்
புலம் தோய் தழைப் பந்தர் தண்டு உற நாற்றி
பொரு கடல் சூழ்
நிலம் தாவிய எம்பெருமான் தனது வைகுந்தம்
அன்னாய்!
கலந்தார் வரவு எதிர்கொண்டு வான்
கொன்றைகள் கார்த்தனவே
(திருவிருத்தம் 68)

"வைகுந்தத்தை ஒத்தவளே! கார்காலம் வராத பொழுது கொன்றை மரங்கள் கருவுற்று அரும்பத் தொடங்கின அன்றிப் பந்தலில் முழுதும் பூத்துக் குலுங்கவில்லை. இன்னும் கார் வரவில்லை" என்று மாற்றுவார்; காமம் பக்தியாகிறது. இம்மாற்றம் பற்றிய ஏ.கே.ராமானுஜனின் கூற்று சிறப்புடையது. அகப்பாடலில் முல்லைத்திணையின் இரங்கல் எனும் உரிப்பொருளுக்குரிய பூக்கும்மரம், மழை, ஏங்கிக்காத்திருக்கும் தலைவி ஆகிய யாவும் பக்திப்பாடலுக்கு இடமாற்றம் பெறுகின்றன என்று எடுத்துக் காட்டுவார்.

In the earlier poem, the flowering tree, the rain, the anxious beloved, etc., were the signifiers for the erotic mood of waiting (mullai). In the later poem, the entire erotic tradition has become a new signifier, with bhakti as the signified. Now the classical tradition is to bhakti what the erotic motifs are to the tradition. (The Collected Essays of A.K.R.252)

வைணவத் தத்துவம் ஆழ்வார் பாடல்களுக்குக் கடன்பட்டிருப்பதும் ராமானுஜர் தமது விசிஷ்டாத்துவைதக் கோட்பாட்டை அவற்றிலிருந்தே உருவாக்கிக் கொண்டாரென்பதும் யாவரும் அறிந்த ஒன்றாகும். அப்பர், மாணிக்கவாசகர் போன்ற நாயன்மார்களின் பாடல்களிலிருந்தே சங்கரரின் அத்துவைதக் கோட்பாடு பெறப்பட்ட தென்பதை எ.ஃப். டபிள்யூ. எல்லிஸ் சுட்டிக் காட்டுவார். ராமானுஜர் தமது கீதாபாஷ்யத்தில் திருமாலின் பண்புநலன்களைச் சுட்டும்போது பரிபாடலுக்குக் கடன்பட்டிருக்கிறார்; கீதையில் இல்லாத அடைமொழிகள் பலவற்றைத் திருமாலுக்குச் சேர்க்கிறார். புறப்பாடல் ஒன்றிலிருந்தும் ஓர் உருவகத்தை எடுத்துக் கொள்கிறார். அதியமானைப்பாடும் அவ்வையார் அவனை யானைக்கு ஒப்பிடுவார்:

ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழா அலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
இனியை பெரும எமக்கே மற்றதன்
துன்னரும் கடாஅம் போல
இன்னாய் பெருமநின் ஒன்னா தோர்க்கே
(புறம். 94)

இறைவன் அடியாரிடத்து எளியனாகவும் ஒன்னாதோர்க்கு நெருங்குதற்கு அரியனாகவும் இருப்பதை இந்த உவமையைக் கொண்டே விளக்குவார் ராமானுஜர்.

ஜான் கார்மென் (John B. Carman) என்பார் தமது ராமானுஜரின் இறையியல் (The Theology of Ramanuja : An Essay in Interreligious Understanding) என்ற நூலில் குறிப்பிடும் இந்த உவமை ஏ.கே.ராமானுஜனால் பாராட்டப் பெறுகிறது. மூலம் புறநானூற்றில் இருப்பதை அவரால் கண்டு கொள்ளமுடியாமல் போனது வியப்புக்குரியதாகும்.

> ஒரு யானை மீது ஏறு என்று ஒரு நொண்டி மனிதனுக்கு நீ கட்டளையிட்டால் அவனால் எப்படி அதனைச் செய்ய முடியும்? அதுபோல, இந்தக் குறையுடைய உலகில் உள்ள ஓர் அற்பமான ஆன்மா எல்லாவற்றிற்கும் தலைவனான இறைவனை எவ்வாறு அணுக முடியும்? இதற்கு விடை யானை தானாகவே மண்டியிட்டுக் கீழே அமருமானால்

நொண்டியால் யானைமீது ஏறிவிடமுடியும் என்பதே

இவ்விடத்திலும் ராமானுஜர் அவ்வையின் உவமையைச் சற்றே மாற்றம் செய்து தரக் காணலாம்.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் தமது ஆச்சார்ய ஹ்ருதயத்தில் நம்மாழ்வார் பாடல்களின் அகப்புறப் பரிமாணங்களுக்குத் தனியிடம் அளித்துத் தமது தொடர் உருவக விளக்கங்களில் பயன்படுத்திக் கொள்கிறார். தலைவியின் முகம், திங்களுக்கு ஒப்பிடப்பட்டிருப்பதை ஆன்மாவின் தூய்மையை உருவகிப்பதாகக் கொள்வார். ஓர் அரசன் தனது நாட்டை ஆள்வதைப் போலவே திருமால் உலகை ஆள்வதாகக் காண்கிறார். அரசனின் ஐந்து

பணிகளோடு திருமாலின் ஐந்து இயல்புகள் இணைத்துப் பேசப்படுகின்றன.

மன்னன் அரியணையிலிருந்து அரசாள்வது போல் இறைவன் விண்ணுலகாகிய பரமபதத்திலிருந்து கோலோச்சுகிறான். இரவில் அரசன் மாறுவேடம் பூண்டு குடிகளைக் கண்காணிப்பது போல் இறைவன் உயிர்களில் எல்லாம் 'அந்தர் யாமியாக' அவர்களுக்கே தெரியாமல் மறைந்து உறைகிறான். குடிகளின் நலனை எவ்வாறு காப்பதென்று அமைச்சரோடு கலந்துரையாடுவது போல் இறைவன் பாற்கடலில் அனந்தனாகிய பாம்பின் மேல் படுத்துத் தன் அடியார்களுக்கு நலம் சேர்ப்பது எவ்வாறு என்று சிந்தனையில் ஆழ்கிறான். அரசன் கொடிய விலங்குகளை வேட்டையாடுவது போல் இறைவன் அவதாரங்களின் மூலம் மண்ணிற்கு வந்து அரக்கர்களை அழிக்கிறான். அரசன் இன்பப் பூங்காவில் ஓய்வெடுப்பதுபோல் இறைவன் காடுகளிலும் மலைகளிலும் உள்ள கோவில்களில் தங்கி மகிழ்கிறான். இவ்வாறு திருமாலின் 'பர' அந்தர்யாமின், 'வியூக', 'அவதார', 'அர்ச்ச' இயல்புகள் மன்னனின் கடமைகளாக விளக்கம் பெறுகின்றன.

சங்கச் செவ்விலக்கியத்திலிருந்து பக்தி இலக்கியம் உருமாற்றம் பெற்றது போலவே கவிதையிலிருந்து இறையியல் இங்கு உருமாற்றம் பெறுகிறது என்பார் ராமானுஜன்.

The transposition from poetry to theology takes the same form as the earlier transposition from Classicism to bhakti....... The saint as man speaking to God as beloved and protégé, offering Him his interior akam and exterior puram is at the same time, in the same words, a poet in a tradition, 'a man speaking to men'. (The Collected Essay of AKR 254&255)

பள்ளியெழுச்சிப்பாடல் மரபு புறநானூற்றிலிருந்து மாணிக்க வாசகருக்கும் ஆண்டாளுக்கும் கிடைத்துப் பின் பிற மொழிகளுக்குப் பரவியது.

அம்பர் கிழான் அருவத்தையைப் பாடும் கல்லாடனார்,

'வெள்ளி தோன்றப் புள்ளுக்குர லியம்பப்

புலரி விடியற் பகடுபல வாழ்த்தி' (புறம் 385:1,2)

என்பார்.

கிள்ளி வளவனை எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்

வெள்ளியும் இருவிசும்பு ஏர்தரும் புள்ளும்
உயர்சினைக் குடம்பைக் குரல்தோற் றினவே;
பொய்கையும் போதுகண் விழித்தன பையச்
சுடரும் சுருங்கின்று ஒளியே பாடுஎழுந்து
இரங்குநல் முரசமொடு வலம்புரி ஆர்ப்ப
இரவுப் புறங்கண்ட காலைத் தோன்றி (புறம் 397)

என்று பள்ளியெழுப்புவார். சேரமானை திருத்தாமனார்,

மதிநிலாக் கரப்ப வெள்ளி யோர்தர .. .. ..
பொறிமயிர் வாரணம் பொழுதறிந் தியம்பப்
பொய்கைப் பூமுகை மலரப் பாணர்
கைவல் சீறியாழ் கடனறிந் தியக்க (புறம் 398)

என்று கூறிப் பள்ளியெழுப்புவார். மதுரைக் காஞ்சி,

பொறிமயில் வாரணம் வைகறை இயம்ப
யானையங் குருகின் சேவலொடு காமர்
அன்னம் கரைய அணிமயில் அகவப்
பிடிபுணர் பெருங்களிறு முழங்க

என்று பள்ளியெழுச்சி வருணனையைத் தொடங்கும்.

மணிவாசகரின் திருப்பள்ளி எழுச்சியில்

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவினதாரகை ஒளிஒளி உதயத்து

ஒருப்படுகின்றது என்ற அடிகளையும்,

ஆண்டாளின் திருப்பாவையில்,

புள்ளும் சிலம்பின காண்: புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விரிசங்கின் பேரரவம் கேட்டிலையோ? (479)

கீசுகீசென்று எங்கும் ஆனைச் சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? (480)

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தன காண் (481)

வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று
புள்ளும் சிலம்பின காண் (486)

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழு நீர்வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய்
கூம்பின காண் (487)

வந்து எங்கும் கோழி அழைத்தன காண் மாதவிப்
பந்தர் மேல் பல்கால் குயில் இனங்கள் கூவின
காண் (491)

என்பன போன்ற பல அடிகளையும் காணலாம்.

...... தொடரும்

சங்கச் செய்திகள்

11.12.2019 அன்று காலை 10.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை "கணினித் தொழில்நுட்பத்தில் தமிழ் மொழியின் பயன்பாடுகள்" என்ற பொருண்மையில் பயிலரங்கம் நடைபெற்றது. முதல்வர்(பொ.) முனைவர் கி.வேணுகா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மொழியியல் துறைப் பேராசிரியர் அ.காமாட்சி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். மைசூரு இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் இந்திய மொழிகளின் சொல்தரவக மேம்பாட்டு மையத்தின் மேனாள் தலைவர் பேராசிரியர் எல்.இராமமூர்த்தி அவர்கள் மையக் கருத்துரை வழங்கினார். அமெரிக்காவின் தமிழ் அநிதம் என்ற அமைப்பின் தோற்றுநர் மற்றும் தலைவர் திருமதி சுகந்தி நாடார் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். அவர் தமது உரையில் மாணவர்கள் திறன்பேசியை திறமை உயர்த்தும் கருவியாகப் பயன்படுத்த வழிமுறைகளையும், தமிழ்ப் பயன்பாட்டினால் தமிழ் வாழவேண்டும் என்பதன் அவசியத்தையும் விரிவாகக் குறிப்பிட்டார். தொழில்நுட்ப அமர்வுகளின்போது மின்நூல் தயாரிப்பு, ஒருங்குறி, இகலப்பையின் பயன்பாடு எனப் பன்முகப் பயிற்சி அளிக்கப்பட்டது. அமெரிக்காவின் தமிழ் அநிதம் அமைப்புடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக இப்பயிலரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது. பயிலரங்கின் பங்கேற்பாளர்களுக்கு சங்கச் செயலர் வழக்குரைஞர் திரு.ச.மாரியப்பமுரளி அவர்கள் சான்றிதழ் வழங்கினார். இப்பயிலரங்கினை துணைமுதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்கள் தொகுத்து வழங்கினார்; உதவிப் பேராசிரியர் முனைவர் பூ.பூங்கோதை அவர்கள் நன்றி கூறினார்.

13.12.2019 அன்று மதுரையில் நடைபெற்ற இந்திய சர்வதேச சுற்றுலா கண்காட்சியில், சுற்றுலாவியலை விருப்பப் பாடமாகப் பயிலும் மூன்றாம் ஆண்டு இளம் இலக்கியம் மாணவர்கள் பார்வையிட்டனர். உதவிப் பேராசிரியர் முனைவர் பா.ஆறுமுகம் அவர்கள் மாணவர்களை ஒருங்கிணைத்தார்.

14.12.2019 அன்று மங்கையர்க்கரசி கல்லூரியில் நடைபெற்ற அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கிடையேயான 'முத்தமிழ்ச் சாரல் விழாப் போட்டி'களில் கலந்து கொண்ட செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் பேச்சுப்போட்டி, ரங்கோலி, வினாடிவினா, நடனம் ஆகிய நான்கு போட்டிகளில் பரிசுபெற்று அனைத்துப்போட்டிகளிலும் வெற்றி பெற்றமைக்காக கோப்பையைப் பெற்றனர்.

19.12.2019 அன்று எம்.எஸ்.செல்லமுத்து அறக்கட்டளை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் மனநலக் கல்வி மேம்பாட்டிற்கும், ஆராய்ச்சித் திட்டத்திற்கும், கருத்தரங்க மாநாடுகள் நடத்துவதற்கும், மனநலக் கல்வியறிவு சமுதாயத்திற்குப் பயன்படுமாறு ஒன்றிணைந்து செயலாற்றுவதற்குமான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மாணவர்களுக்கான மனநலம் குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கம் நடைபெற்றது. கல்லூரிச் செயலர் மாட்சிமை தங்கிய இராணி.ந.இலட்சுமி குமரன்சேதுபதி அவர்கள் தலைமை வகித்தார். சங்கச் செயலர் வழக்குரைஞர் திரு.ச.மாரியப்பமுரளி அவர்களும் எம்.எஸ்.செல்லமுத்து அறக்கட்டளை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் உயர்திரு. கு.குருபாரதி அவர்களும் முன்னிலை வகித்தனர். எம்.எஸ்.செல்லமுத்து அறக்கட்டளை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் நிறுவனரும் தலைவருமான மருத்துவர் சி.இராமசுப்பிரமணியன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். அந்நிறுவனத்தின் ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் எம்.கண்ணன் அவர்கள் "வாழ்க்கை நிலை" என்ற பொருண்மையிலும், மதுரை காமராசர் பல்கலைக்கழக சுற்றுச்சூழல் துறைப் பேராசிரியர் மற்றும் புலத்தலைவர் முனைவர் சு.கண்ணன் அவர்கள் "வாழ்க்கை வாழ்வதற்கே" என்ற பொருண்மையிலும் கருத்துரை வழங்கினர். இக்கருத்தரங்கில் முதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் வரவேற்புரையும் துணைமுதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்கள் நன்றியுரையும் நல்கினர்.

20.12.2019 அன்று மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்களின் 116ஆம் ஆண்டு நினைவுக் கோப்பை அனைத்துக் கல்லூரி ஆண்களுக்கான கபாடிப் போட்டி அமெரிக்கன் கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்டது. சங்கச் செயலர் வழக்குரைஞர் திரு.ச.மாரியப்பமுரளி அவர்கள் தொடங்கி வைத்தார்.

20.12.2019 அன்று திருவள்ளுவர் மன்றத்தில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் இரண்டாமாண்டு இளங்கலை மாணவி இரா.பிரியரஞ்சனி முதல் பரிசும், முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவி த.கார்த்திகா மூன்றாம் பரிசும் பெற்றனர். வினாடி வினாப் போட்டியில் முதுகலை இரண்டாமாண்டு மாணவர்கள் சு.முத்துப்பாண்டி மற்றும் த.தோகைலட்சுமி மூன்றாம் பரிசு பெற்றனர்.

30.12.2019 அன்று அகவை 78இல் அடி எடுத்து வைக்கும் சங்கத் துணைத் தலைவர் சமூக நல்லிணக்க மருத்துவர் திரு.ந.சேதுராமன் அவர்களுக்கு சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் சால்வை அணிவித்து சங்கத்தின் சார்பாக பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

பிப்ரவரி திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

மகாவித்துவான்
மீனாட்சி சுந்தரம் பிள்ளை
(பிப்.1)

நா.வானமாமலை
(பிப்.2)

மு.இராகவையங்கார்
(பிப்.2)

எச்.ஏ.கிருட்டிணப் பிள்ளை
(பிப்.3)

வீரமாமுனிவர்
(பிப்.4)

ஜி.யு.போப்
(பிப்.12)



செய்குதம்பிப் பாவலர்
(பிப்.13)

ச.வையாபுரிப்பிள்ளை
(பிப்.17)

ஜி.நாகராஜன்
(பிப்.19)

வை.மு.கோதைநாயகி
அம்மாள்
(பிப்.20)

பதிப்பாசிரியர்: **பேராசிரியர் இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

முனைவர் **தி.முருகரத்னம்**

முனைவர் **இராம.சுந்தரம்**
முனைவர் **ம.திருமலை**
முனைவர் **இ.மறைமலை**
முனைவர் **செ.கந்தசாமி**
முனைவர் **பெ.சுயம்பு**
முனைவர் **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் **மு.மணிவேல்**
முனைவர் **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் **இ.கி.ராமசாமி**
முனைவர் **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் கி.வேணுகா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,	From
செயலாளர் நான்காம் தமிழ்ச் சங்கம் 54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 625 001.	**THE SECRETARY** The Fourth Tamilsangam 54, Tamil Sangam Road, Madurai - 625 001,TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: செந்தமிழ் அச்சகம், 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1